**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி** (Higher Certificate Course)
**HG30 – நிலை 3 – (Grade 3)**

**நேரடி எழுத்துத் தேர்வு** (Offline Examination)
**ஜனவரி–பிப்ரவரி 2021**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

## பிரிவு – 1

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
Answer all questions in a word / line. **(10x1 = 10)**

1. பறவைகள் எவ்வாறு இறைவனைத் தொழும்?
2. கவிஞர் வெ. இராமலிங்கனார் வாழ்ந்த ஊர் எது?
3. சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்?
4. திருவள்ளுவர் காலத்தை எழுதுக.
5. திருக்குறளுக்கு வேறு பெயர் யாது?
6. நான்மணிக்கடிகை ஆசிரியரின் ஊர்ப்பெயர் என்ன?
7. ஓவியங்களில் சிறப்பானது எந்த ஓவியம்?
8. திரிகூடராசப்பக் கவிராயர் எழுதிய நூல் எது?
9. பறவையைக் கண்டான் விமானம் படைத்தான் இது யாருடைய கவிதை அடி?
10. பொருள்கோளின் வகை எத்தனை?

## பிரிவு – 2

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
Answer any ten questions in three lines each. **(10x2=20)**

1. இளங்கோவடிகளின் பெற்றோர் யாவர்?
2. தக்கார், தகவிலர் என்பது எதனால் காணப்படும்?
3. நண்பரிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?
4. தேவாரத்தை இயற்றியவர்கள் யாவர்?
5. திருமாலிடம் எட்டெழுத்து அறிவுரை பெற்ற ஆழ்வார் ஆனவர் யார்?
6. இறைவன் என்னும் பொருள் தரும் சொல்லை உமறுப்புலவர் எவ்வாறு குறிப்பிடுகிறார்?
7. தம்பி அழுதக் கண்ணீர் ஆறு எவ்வாறு பாய்ந்தோடியது?
8. தமிழில் உள்ள காவியங்கள் சிலவற்றைக் கூறுக.
9. மணியின் தொல்லை பொறுக்காத ஆசிரியர் என்ன செய்தார்?
10. வலவன் ஏவா வான ஊர்தி என்றால் என்ன?

11. மணி போன்ற மாணவர்களை எப்படி உருவாக்க வேண்டும்?
12. பகுபத உறுப்புகளை எழுதுக.
13. மாத்திரை என்றால் என்ன?
14. ஆகுபெயர் என்றால் என்ன?
15. பூ+கொடி = பூங்கொடி இதற்குரிய புணர்ச்சி விதி யாது?

## பிரிவு – 3

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**

Answer any five questions in six sentences each. **(5x4=20)**

1. புகழ் என்னும் அதிகாரத்தில் உள்ள இரண்டு குறளின் கருத்துகளை எழுதுக.
2. நான்மணிக்கடிகை பாடலின் கருத்தினை எழுதுக.
3. நாரை விடு தூது பற்றி நீவிர் அறிந்தவற்றை நூல் வழி எழுதுக.
4. காவிரியாற்றின் பெருமைகளை எழுதுக.
5. குற்றாலத்தின் இயற்கை அழகை 6 வரிகளில் எழுதுக.
6. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பற்றி எழுதுக.
7. மையீற்றுப் பண்புப்பெயர்கள் புணர்ச்சியை நூற்பா வாயிலாக எடுத்துக்காட்டுகளுடன் தருக.
8. வல்லினம் மிகு இடங்கள், வல்லினம் மிகா இடங்களுக்கு 6 எடுத்துக்காட்டுகள் தருக.

## பிரிவு – 4

**IV. ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.**

Answer any one of the following questions in fifteen sentences. **(1x10=10)**

1. முக்கூடற்பள்ளு பாடல் கருத்தினை எழுதுக.
2. விரைட் சகோதரர்கள் கண்டுபிடித்த விமானத்தைப் பற்றிய செய்திகளைத் தொகுத்தெழுதுக.
3. அறுவகை வினாக்களை விளக்குக.

## பிரிவு – 5

**V. ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.**

Write an essay in three pages to any one of the questions. **(1x15=15)**

1. இக்கால இலக்கியத்தினை விரிவாக எழுதுக.
2. பொருள்கோள் வகைகளை விளக்குக.

**********